**மே – 11**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு அமைச்சரவையானது, சமீபத்தில் மாற்றியமைக்கப்பட்டு, அமைச்சர் துரைமுருகனுக்கு சட்டத்துறையும், முன்னதாக அவர் கொண்டிருந்த கனிமங்கள் மற்றும் சுரங்கத்துறை S. ரகுபதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.
- பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் அவசரகால தயார்நிலையை மேம்படுத்தச் செய்வதற்காக 'அபியாஸ் நடவடிக்கை' என்ற பெயரில் மிகப்பெரிய அளவிலான குடிமைப் பாதுகாப்பு மாதிரியான ஒரு போர் ஒத்திகையானது நாடு முழுவதும் நடத்தப் பட்டது.
- அஹில்யாபாய் ஹோல்கரின் 300வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது, இந்த மராட்டிய இராணியின் வாழ்க்கை வரலாறு குறித்த ஒரு பிரமாண்டமான வரலாற்றுத் திரைப்படத்தினை தயாரிக்க உள்ளதாக மகாராஷ்டிரா மாநில அரசு அறிவித்துள்ளது.
- "Reaching New Worlds: A Space Exploration Renaissance" என்ற கருத்துருவின் கீழ் 12வது உலகளாவிய விண்வெளி ஆய்வு மாநாட்டினை (GLEX 2025) இந்தியா நடத்தியது.
- மத்தியப் புலனாய்வுப் பிரிவின் (CBI) இயக்குனர் பிரவீன் சூட்டின் பதவிக் காலம் என்பதை மத்திய அரசானது து ஓராண்டிற்கு நீட்டித்துள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் உலக வர்த்தக மையத்தில் 11வது மத்தியக் கிழக்கு கடல் வணிக கடல்சார் தளவாடங்கள் (SMLME) மாநாடு நடத்தப் பட்டது.
- சிங்கப்பூரில் நடைபெற்று வரும் 2025 ஆம் ஆண்டு ஆசிய - சர்வதேச கடல்சார் பாதுகாப்புக் கண்காட்சியில் (IMDEX) இந்தியா, அமெரிக்கா மற்றும் 13 நாடுகள் பங்கேற்கின்றன.
- சமூக சேவகர் மற்றும் தொழில்முனைவோரான டாக்டர் முஸ்தபா யூசுபலி கோம் என்பவருக்குச் சமீபத்தில் மதிப்புமிக்க 2025 ஆம் ஆண்டு சர்வதேசப் புத்த அமைதி விருது அளிக்கப் பட்டது.
- மக்கள், மிகவும் குறிப்பாக இளையோர்கள், விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கு ஊக்குவிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் மே 07 ஆம் தேதியன்று உலகத் தடகளத் தினமானது கொண்டாடப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பாரத் சஞ்சீவனி

- ஆவின் - தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு லிமிடெட் (TNCMPFL) நிறுவனத்துடன் இணைந்து பாரத் சஞ்சீவனி என்ற கைபேசிச் செயலியானது வெளியிடப் பட்டுள்ளது.
- ஆவின் நிறுவனத்துடன் தொடர்புடைய கால்நடை உரிமையாளர்களுக்கு மிகவும் சில அத்தியாவசிய கால்நடைப் பராமரிப்பு சேவைகள் மற்றும் கால்நடை வளர்ப்பு குறித்த தகவல்களை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மாநிலத்தில் உள்ள பால் பண்ணை விவசாயிகளுக்காக 1800-425-2577 எனப்படும் கட்டணமில்லா உதவி எண்ணும் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஆவின் நிறுவனமானது, 3.8 லட்சம் விவசாயிகளிடமிருந்து ஒரு நாளைக்கு 36.50 லட்சம்


லிட்டர் பால் கொள்முதல் செய்து 30.02 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்கிறது.




# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் வரைவு பருவநிலை நிதி வகைபிரித்தல்


*Figure 3: Principles of the Climate Finance Taxonomy*




- நிதித் துறை அமைச்சகமானது, 'இந்தியாவின் பருவநிலை நிதி வகை பிரித்தல்' வரைவு கட்டமைப்பினை வெளியிட்டுள்ளது.
- இது மின்சாரம், போக்குவரத்து, கட்டிடங்கள், வேளாண்மை மற்றும் பசுமை இல்ல வாயு உமிழ்வினைக் குறைப்பதில் சவால் மிகுந்த இரும்பு மற்றும் எஃகு மற்றும் சிமெண்ட் போன்ற துறைகள் உள்ளிட்ட துறைகளை உள்ளடக்கியது.
- இந்த வகை பிரித்தல் ஆனது மேம்பாட்டு ஆதாயங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக ஏற்பு மற்றும் மீள்தன்மையை உருவாக்குவதை வலியுறுத்தும்.

- இந்தப் புதிய ஆவணமானது, பல செயல்பாடுகள் மற்றும் திட்டங்களை "பருவநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் வகையிலானது" மற்றும் "மாற்றத்தினை ஆதரிக்கும் வகையிலானது" என இரண்டு வகைகளாக வகைப்படுத்தும்.
- 2070 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழிய அளவிலான உமிழ்வை அடைவது உள்ளிட்ட ஒரு தொடர் பருவநிலை இலக்குகளை இந்தியா நிர்ணயித்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் நாட்டின் உமிழ்வு தீவிரத்தினை சுமார் 45% குறைப்பதே அதன் இடைக்கால இலக்காகும்.
- கூடுதலாக, 2030 ஆம் ஆண்டிற்குள் புதைபடிவம் அடிப்படையிலான மூலங்களிலிருந்து தோராயமாக சுமார் 50% மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்படும் ஒரு நிலைக்கு மாறுவதற்கான இலட்சிய இலக்கினை இந்தியா நிர்ணயித்துள்ளது.

## தேசிய மீத்திறன் கணினி திட்டம் 2025




- தேசிய மீத்திறன் கணினித் திட்டமானது சமீபத்தில் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி, சுமார் 35 பெட்டாஃப்ளாப்கள் அளவிலான ஒருங்கிணைந்த கணினித் திறன் கொண்ட மொத்தம் 34 மீத்திறன் கணினியானது பல்வேறு நிறுவனங்களில் நிறுவப் பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன.
- இந்த மீத்திறன் கணினி அமைப்புகள் மருந்துக் கண்டுபிடிப்பு, பேரிடர் மேலாண்மை, எரிசக்திப் பாதுகாப்பு, பருவநிலை மாதிரியாக்கம், வானியல் ஆராய்ச்சி, கணக்கீட்டு வேதியியல், பாய்ம இயக்கவியல் மற்றும் பொருள் ஆராய்ச்சி போன்ற முக்கியமானக் களங்களில் ஆராய்ச்சிக்கு உதவுகின்றன.


## நீதிபதி வர்மா மீதான விசாரணை அறிக்கை

- நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னாவினால் அமைக்கப்பட்ட குழுவானது தனது அறிக்கையைச் சமர்ப்பித்து உள்ளது.
- சஞ்சீவ் கன்னா அவரது ராஜினாமாவைக் கோரியதாகவும், ஆனால் நீதிபதி வர்மா அதனை மறுத்து விட்டதாகவும் அறியப்படுகிறது.
- இந்தியத் தலைமை நீதிபதி, நீதிபதி வர்மாவின் பரிந்துரையுடன், மூன்று நீதிபதிகள் கொண்ட ஒரு விசாரணைக் குழுவின் அறிக்கையைத் தற்போது குடியரசுத் தலைவர் மற்றும் பிரதமருக்கு அனுப்பியுள்ளார்.
- நீதிபதி வர்மாவைப் பதவி நீக்குவதற்கான ஒரு செயல்முறையைத் தொடங்குவதற்கு

குடியரசுத் தலைவருக்கு அவர் பரிந்துரைத்ததாக அறியப்படுகிறது.




## சில்லுகள் பொருத்தப்பட்ட இணையவழிக் கடவுச்சீட்டு அறிமுகம்





- இந்திய அரசானது, நாடு முழுவதும் சில்லுகள் பொருத்தப்பட்ட இணையவழிக் கடவுச் சீட்டுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒரு சோதனை முன்னெடுப்பாகத் தொடங்கப் பட்டது.
- இந்த இணைய வழிக் கடவுச்சீட்டுகள் அதில் பொதிக்கப்பட்ட ரேடியோ அதிர்வெண்

அடையாளம் காணும் (RFID) சில்லுகள் மற்றும் அலை வாங்கிகள் மூலம் மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளன.

- ❖ இந்தச் சில்லுகள் கடவுச் சீட்டுகள் வைத்திருப்பவரின் உயிரியளவியல் தகவல்கள் உள்ளிட்ட தரவுகளை சேமிக்கும்.
- ❖ ஜெர்மனி, அமெரிக்கா மற்றும் ஐக்கியப் பேரரசு போன்ற சில நாடுகள் ஏற்கனவே உயிரியளவியல் தகவல் அடிப்படையிலான பயண ஆவணங்களைக் கொண்டுள்ளன.

## திருத்தியமைக்கப்பட்ட SHAKTI கொள்கை





- ❖ பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது, (CCEA) திருத்தி அமைக்கப்பட்ட SHAKTI கொள்கையின் கீழ் ஒரு முன்மொழிதலை அங்கீகரித்துள்ளது.
- ❖ மத்திய துறை மற்றும் மாநிலத் துறையைச் சேர்ந்த அனல் மின் நிலையங்கள் மற்றும் சுயாதீன மின் உற்பத்தி நிறுவனங்கள் (IPPs) ஆகியவற்றிற்கு அதிக அளவு நிலக்கரி கிடைக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ நிலக்கரி விநியோகம் போதுமானதாக இல்லாத நெருக்கடியில் உள்ள மின் உற்பத்தி அலகுகளுக்கு நிலக்கரியை வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டில் SHAKTI கொள்கை தொடங்கப்பட்டது.
- ❖ SHAKTI என்பது 'Scheme for Harnessing Scheme for Harnessing and Allocating Koyala Transparently in India - இந்தியாவில் நிலக்கரியினை (கோயாலா) மிக வெளிப்படையான முறையில் பயன்படுத்துவதற்கும் ஒதுக்குவதற்குமான திட்டம்' என்பதைக் குறிக்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்திய-பசிபிக் தளவாடங்கள் வலையமைப்பு (IPLN)

- ❖ குவாட் அமைப்பின் பங்குதார நாடுகளான ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகியவை ஹவாயில் ஒரு "பேச்சுவார்த்தை நடவடிக்கை-டேபிள்டாப் பயிற்சியில்" பங்கேற்றன.
- ❖ இது குவாட் இந்தோ-பசிபிக் தளவாடங்கள் வலையமைப்பினை (IPLN) தொடங்கச் செய்வதற்கான ஒரு மாதிரியாகும்.
- ❖ இந்த IPLN முன்னெடுப்பானது, குவாட் நாடுகளின் பங்குதாரர் நாடுகள் இந்தோ-பசிபிக் பகுதியில் பகிரப்பட்ட தளவாட திறன்களைப் பயன்படுத்த உதவுகிறது.

- இது பிராந்தியம் முழுவதும் ஏற்படும் இயற்கைப் பேரழிவுகளுக்கு எதிராக நாட்டுக் குடிமக்களைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை மிகவும் விரைவாகவும் திறம் மிக்க முறையிலும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## அட்டகாமா பிராந்தியத்தில் தாமிர இருப்புகள்




- சிலி நாட்டில் உள்ள அட்டகாமா என்ற பிராந்தியத்தில் உள்ள ஃபிலோ டெல் சோல் திட்டத்திற்கான புதிய வள மதிப்பீடு ஆனது, உலகின் மிகப்பெரிய தாமிரம், தங்கம் மற்றும் வெள்ளி வளங்களில் ஒன்றை உறுதிப்படுத்தியுள்ளது.

- ❖ இது கடந்த 30 ஆண்டுகளில் மிகப்பெரிய பசுந்தட (இதுவரைப் பயன்படுத்தப்படாத) தாமிர இருப்பின் கண்டுபிடிப்பு ஆகும்.
- ❖ இங்கு குறைந்தது 13 மில்லியன் டன் தாமிரம் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ இங்கு 32 மில்லியன் அவுன்ஸ் தங்கமும் 659 மில்லியன் அவுன்ஸ் வெள்ளியும் இருக்கக் கூடும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகின் மிக அதிக பனிச்சிறுத்தை அடர்த்தி கொண்ட பகுதி- லடாக்

- ❖ லடாக்கில் 477 பனிச்சிறுத்தைகள், அதாவது நாட்டின் மொத்தப் பெரும்பூனைகளின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு பனிச்சிறுத்தைகள் காணப் படுகின்றன.
- ❖ லடாக்கில் உலகின் மிகவும் அதிகப் பெரும் பூனை அடர்த்தி பதிவாகியுள்ளதுடன், இது இந்தியாவின் உயரினங்கள் எண்ணிக்கையில் சுமார் 70 சதவீதத்தைக் குறிக்கிறது.
- ❖ நாட்டில் பனிச்சிறுத்தை எண்ணிக்கை 718 ஆக உள்ளது.
- ❖ இப்பனிச் சிறுத்தையின் வாழ்விடம் என்பது இந்தியா, சீனா, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் போன்ற ஆசியாவின் மலைப்பகுதிகளில் பரவியுள்ளது.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறை குறித்த லான்செட் அறிக்கை

- ❖ உலகளவில் சுமார் ஐந்து பெண்களில் ஒருவர் (18.9 சதவீதம்) மற்றும் ஏழு ஆண்களில் ஒருவர் (14.8 சதவீதம்) 18 வயதுக்கு முன்பே பாலியல் வன்முறையை எதிர் கொண்டு உள்ளனர்.

- இந்தியாவில் 18 வயதிற்கு முற்பட்ட 30.8% சிறுமிகளும் 13% சிறுவர்களும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியுள்ளனர்.
- தெற்காசியாவில் பெண்களுக்கு ஏற்பட்ட மிக அதிகபட்சப் பாதிப்பு இதுவாகும்.
- அமெரிக்காவில் பெண்களில் சுமார் 27.5 சதவீதமும் ஆண்களில் சுமார் 16.1 சதவீதமும்; ஐக்கியப் பேரரசில் பெண்களில் சுமார் 24.4 சதவீதமும் ஆண்களில் சுமார் 16.5 சதவீதமும் பாதிப்புகள் பதிவாகியுள்ளன.




# மாநிலச் செய்திகள்

## இந்தியாவின் முதல் EduCity





- மகாராஷ்டிரா நவி மும்பையில் ஒரு EduCity-கல்வி நகரத்தினை அமைக்க உள்ளது.
- இது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கான இந்தியாவின் முதன்முதலான கல்வி வளாகமாக இருக்கும்.

- நகரம் மற்றும் தொழில்துறை மேம்பாட்டுக் கழகம் (CIDCO) ஆனது ஐக்கியப் பேரரசின் யார்க் பல்கலைக்கழகம் மற்றும் மேற்கு ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகம் ஆகிய சில வற்றுடன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்தப் பல்கலைக்கழகங்கள் நவி மும்பையில் தங்கள் வெளிநாட்டு வளாகங்களை அமைக்க உள்ளன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## புதிய போப் (267வது போப்) – இராபர்ட் பிரீவோஸ்ட்

- இராபர்ட் பிரான்சிஸ் பிரீவோஸ்ட், லியோ XIV என்ற பெயருடன் அமெரிக்காவினைச் சேர்ந்த முதல் போப்பாண்டவராக பொறுப்பேற்றுள்ளார்.
- உலகெங்கிலும் உள்ள கர்டினல்கள் உலகின் சுமார் 1.4 பில்லியன் கத்தோலிக்கர்களின் தலைவராக அவரைத் தேர்ந்தெடுத்தனர்.
- லியோ என்ற பெயரைக் கொண்டிருந்த கடைசி போப் 1878 முதல் 1903 ஆம் ஆண்டு வரை திருச்சபையை வழிநடத்தினார்.




## 10வது தேசியச் சமூக வானொலி விருதுகள்


- 8வது தேசியச் சமூக வானொலி மாநாடு ஆனது மத்தியத் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

- இந்த தேசிய அளவிலான மாநாடானது புதுமை, உள்ளடக்கிய தன்மை மற்றும் தாக்கம் மூலம் இந்தியாவில் சமூக ஊடக கட்டமைப்பினை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- 12 சிறந்தச் சமூக வானொலி நிலையங்களுக்கு 10வது தேசியச் சமூக வானொலி விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.

| Category | Radio | Program |
|---|---|---|
| Thematic Award | Radio Mayur, Bihar | Tech Sakhi |
| | Radio Kochi, Kerala | Nirangal |
| | Hello Doon, Uttarakhand | Meri Baat |
| Most Innovative Community Engagement Award | Yerlawani Sangli, Maharashtra | Kahani Sunandachi |
| | Vaylaga Vanoli, Tamil Nadu | Let's Build a New Norm |
| | Salaam Namaste, Uttar Pradesh | Maid Didi |
| Promoting Local Culture Award | Radio BrahmaputraRadio Brahmaputra, Assam | Igarekun |
| | Radio Kotagiri, Tamil Nadu | En Makkaludan Oru Payanam |
| | Radio Active, Bihar | Ang Pradesh ki Adbut Dharohar' |
| Sustainability Model Award | Radio Benziger, Kerala | |
| | Radio Namaskar, Odisha | |
| | Radio Antarwani, Karnataka | |

# முக்கிய தினங்கள்

## எல்லைப்புறச் சாலைகள் அமைப்பின் 66வது நிறுவன தினம் - மே 07




- எல்லைப்புறச் சாலைகள் அமைப்பு (BRO) ஆனது 1960 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது கிழக்குப் பகுதியில் டஷ்கர் (தற்போது வர்தக்) மற்றும் வடக்கு இந்தியாவில் பீகன் திட்டம் என இரண்டு திட்டங்களுடன் தொடங்கப் பட்டது.

- இது பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- கடந்த நான்கு ஆண்டுகளில், BRO அமைப்பானது 13,743 கோடி ரூபாய் மதிப்பிலான 456 உள்கட்டமைப்புத் திட்டங்களை நிறைவு செய்துள்ளது.


### உலகச் செஞ்சிலுவை சங்க தினம் 2025 - மே 08




- மனிதநேயம், மிகவும் பாரபட்சமற்ற தன்மை மற்றும் நடுநிலைமை ஆகியவற்றின் கொள்கைகளை ஊக்குவிப்பதோடு, அவசரநிலைகள், போர்கள் மற்றும் பேரழிவுக் காலங்களில் உதவும் தன்னார்வலர்களை கௌரவிக்கும் விதமாக இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாளில் தான் அமைதிக்கான நோபல் பரிசை முதலில் பெற்றவரும், சர்வதேசச் செஞ்சிலுவை சங்கத்தின் (ICRC) நிறுவனருமான ஹென்றி டுனன்ட் பிறந்தார்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் அதிகாரப்பூர்வ கருத்துரு, "Keeping Humanity Alive" என்பதாகும்.

## இதரச் செய்திகள்

### கோதாவரி நதிப் படுகையில் பழங்காலக் காட்டுத்தீ




- கோதாவரி நதிப் படுகையில் பெரும் பழங்காலத்தில் காட்டுத்தீ (பழங்கால நெருப்பு)

ஏற்பட்டது பற்றிய ஆதாரங்களை சமீபத்திய ஆராய்ச்சி கண்டறிந்துள்ளது.

- இந்த தீயானது, பிற்கால சிலூரியன் (419.2 முதல் 443.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு (mya) முதல் நான்காம் நூற்றாண்டு (2.58 மில்லியன்) காலம் வரை நீடித்தது.
- இந்தத் தீயானது தாவரங்கள், பருவநிலை மற்றும் நிலக்கரி உருவாக்கத்தில் கூட ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தியதன் மூலம் நிலப்பரப்புகளில் அதன் அடையாளத்தினை விட்டுச் சென்றுள்ளது.
- ஆராய்ச்சிக் குழுவானது உள்ளிட (இடம் சார்ந்த) மற்றும் வெளியிட (பரவிய) கரி ஆகியவற்றை வெற்றிகரமாக வேறுபடுத்தியது.

## அரிய ஆயுர்வேதக் கையெழுத்துப் பிரதிகள்

- மத்திய ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சி சபையானது (CCRAS) திரவியரத்நகர நிகண்டு மற்றும் திரவியநாமகர நிகண்டு எனப்படும் இரண்டு அரிய ஆயுர்வேத கையெழுத்துப் பிரதிகளை புதுப்பித்து வெளியிட்டுள்ளது.
- திரவியரத்நகர நிகண்டு ஆனது (கி.பி. 1480) முத்கல பண்டிதரால் எழுதப்பட்டது.
- இது மருந்துகளின் பெயர்கள், பண்புகள் மற்றும் சிகிச்சைப் பயன்பாடுகள் பற்றிய பல தகவல்களை வழங்கும் ஒரு விரிவான அகராதி ஆகும்.
- பீஷ்ம வைத்தியரால் எழுதப் பட்டதாகக் கூறப்படும் திரவியநாமகர நிகண்டு ஆனது, தன்வந்தரி நிகண்டுவின் ஒரு தனித்துவமான பிற்சேர்க்கையாகும்.
- இது ஆயுர்வேத மருந்தியலில் மிகவும் ஒரு சிக்கலான ஆனால் முக்கியமான களமாக விளங்கும் மருந்துப் பெயர்களின் ஒத்தப் பெயர்களில் கவனம் செலுத்துகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★